**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 348/2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -1 /PW-1 |
| Name | : திரு. சுப்பிரமணி |
| Father/Husband's Name | : நாகப்பன் |
| Village | : கணக்குபிள்ளை தெரு |
| Taluk | : பாலூர் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2026.

A1, A2 present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பாலூரில் வசித்து விவசாயத் தொழில் செய்து வருகிறேன். கடந்த 02,07.2024 அன்று இரவு 08.00 மணியளவில் எனது மகன் சுனில் மிருதங்கம் வாசிக்க முருகர் கோயிலுக்கு சென்றுவிட்டு வரும் போது சக்தி, சுள்ளான், ஆகாஷ், பிரசன்னா ஆகிய 4 பேரும் எனது மகனை வழிமடக்கி பைப் மற்றும் கத்தியால் வலது கையில்வெட்டிவிட்டார்கள். ஆம்புலன்ஸ் மூலமாக எனது மகனை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் 3 நாட்கள் கழித்து எனது மகனை பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். மருததவமனையிலிருந்து சென்று பாலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். போலிசார் விசாரணை மேற்கொண்டார்கள். மருத்துவமனைக்கும் வந்து பார்த்தார்கள்.

சம்பவம் நடந்த அன்று முத்து வீட்டிற்கு இரவு 09.00 மணியளவில் ஆதங்கத்துடன் நான் சென்று கேட்ட போது முத்து மற்றும் அவரது மகன் அவர் தற்போது ஆஜரில் உள்ளார் என்னை பார்த்து ஓத்தா, தெவிடியா பையா, அதே போல்

உன்னையும் கத்தியால் வெட்டுவேன் என்று கூறினார்கள். முத்து மற்றும் அவரது மகன் என்னை கீழே தள்ளிவிட்டார்கள். நான் பின்னர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். மறு நாள் 01.00 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னை திட்டி அடித்தவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகள். சாட்சியிடம் வழக்கு கோப்பிலுள்ள புகார் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **அந்த புகார் அதகாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எனது மகனுக்கு வலது கை முட்டியில் சுள்ளான், சக்தி, ஆகாஷ் பிரசன்னா ஆகியோர்கள் வெட்டினார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லையென தெரிவித்தார்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.